**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தாராபுரம்,**
**முன்னிலை : திரு.R.பாண்டி மகாராஜா B.Sc.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, தாராபுரம்**
2026–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15–ம் நாள் செவ்வாய்கிழமை
**இ.ம.எண்.1/2025 in அ.வ.எண்.92/2025**

உதயலட்சுமி ....மனுதாரர்/பிரதிவாதி

/எதிராக/

பழனிச்சாமி .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது 07.09.2026–ம் தேதியன்று இறுதியாக என் முன்னர் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.சிவக்குமார் B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.C.செல்வராஜ் B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், இந்த மனுவின் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் எழுத்துமூலமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

இதன் அசல் வழக்கானது வழக்குமூலமற்ற நிலையிலும், பெயரிரவல் தடைச் சட்டத்தின் பிரிவு 4–ன் கீழான தடையினால் பாதிக்கப்படுவதாலும், இதன் அசல் வழக்கின் வழக்குரையை நிராகரிக்க (Rejection of plaint) கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை VII, விதி 11(a), (d) மற்றும் பிரிவு 151–ன் கீழ் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :**

இதன் அசல் வழக்கின் வழக்குரையில் 4–வது பத்தியில், வழக்கு சொத்துக்கள்



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.09.15 16:05:53 +0530

காளிமுத்து அவர்கள் பெயரில், பெயரிரவலாக வாதியால் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பது பெயரிரவல் தடைச் சட்டத்தின் பிரிவு 4–ன் கீழ் வழக்கு தாக்கல் செய்வதற்கு தடையாக அமைந்துள்ளது. மேலும், இந்த வழக்கின் சொத்தினை பொறுத்து 13.06.2014–ம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து எப்பொழுது வாதிக்கு தெரிய வந்தது என்று குறிப்பிடாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது வழக்கு தாக்கல் செய்வதற்கான காலவரையறை சட்டத்தினை பாதிக்கிறது. மேலும், இதன் அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரம் எதுவும் கோராமல் தான செட்டில்மெண்ட் ஆவணத்தினை ரத்து செய்வதற்கான பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேலும், இதன் அசல் வழக்கானது சட்ட வழிமுறைகளை தவறாக கையாண்டு சட்டவிதிகளுக்கு முற்றிலும் எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த அசல் வழக்கின் வழக்குரையானது நிராகரிக்கப்பட வேண்டியது என பிரார்த்திக்கப்படுவதாக இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

இதன் அசல் வழக்குரையில் தான செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து 01.04.2025–ம் தேதியன்று வாதிக்கு தெரிய வந்ததால், 14.03.2014–ம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து 01.04.2025–ம் தேதியன்று பிரதிவாதியிடம் கேட்டுள்ளார் என்பது அன்றிலிருந்தே வழக்கு மூலம் உண்டாகிறது என்பதை எடுத்துரைக்கிறது. மேலும், இதன் அசல் வழக்கின் தரப்பினர்களாக கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்ததால், குடும்பத்தின் மூத்தவர் என்பதினால் அவரின் உழைப்பின் மூலமாக அவரது தகப்பனார் காளிமுத்து என்பவரின் பெயரில் கிரையம் பெற்றதினால், வழக்கு சொத்தில் எதிர்மனுதாரர்/வாதிக்கு பாத்தியமுள்ளது என்று வழக்குரைச் சங்கதிகள்



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.09.15 16:05:57 +0530

இடம் பெற்றுள்ளது என்பதினால், பெயரிரவல் சட்டமானது இந்த வழக்கினை பாதிக்காது. இதன் அசல் வழக்கானது காலவரையறை சட்டத்திற்கு உட்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் அசல் வழக்கானது ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை விசாரித்து முழுமையாக பரிசீலித்த பின்னரே தீர்வு காண முடியும் என்ற நிலையில், அசல் வழக்கை முழு விசாரணை செய்யாமல் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை VII, விதி 11(a), (d)–ன் கீழ் வழக்குரையை நிராகரிக்கக் கோருவது சட்டப்படி தவறான ஒன்றாகும். எனவே, இந்த மனுவினை தள்ளுபடி செய்திட பிரார்த்திக்கப்படுவதாக எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இந்த மனுவினை இருதரப்பிலும் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும், இருதரப்பின் வாதங்கள் கேட்கப்பட்டது மற்றும் வழக்கு கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டன.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்?, "இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதேயாகும்."

<u>5. தீர்வு:–</u>

5.1. இந்த மனுவின், மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால், இதன் அசல் வழக்கின் சொத்தானது வாதியால் பெயரிரவல் கிரையமாக வாதியின் தகப்பனார் பெயரில் 28.11.1996–ம் தேதிய ஆவண எண்.3891/1996–ன் வாயிலாக பெயரிரவல் கிரையமாக பெறப்பட்ட சொத்தாகும் என்று வழக்குரையின் 4–வது பத்தியில் குறிப்பிட்டு பரிகாரம் கோரியுள்ள பெயரிரவல் தடைச் சட்டத்தின் பிரிவு 4–ன் கீழ் பாதிப்புக்குள்ளாகிறது என வாதிடப்பட்டது. மேலும், இதன் அசல் வழக்கானது வழக்கு மூலம் இல்லாத நிலையிலும், காலவரையறைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என வாதிடப்பட்டது.



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.09.15 16:06:01 +0530

எனவே, இதன் அசல் வழக்குரையில் நிராகரித்திட பிரார்த்திக்கப்படுவதாக வாதிடப்பட்டது. அதேவேளையில், இந்த மனுவின் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால், இதன் அசல் வழக்கின் சொத்தானது வாதியானவர் குடும்பத்தின் மூத்தவர் என்ற அடிப்படையில் அவரின் உழைப்பின் மூலம், அவரது தகப்பனார் பெயரில் கிரையமாக பெறப்பட்டது என்பதால் பெயரிரவல் சட்டமானது வாதியின் உரிமையை பாதிக்காது என வாதிடப்பட்டது. மேலும், இதன் அசல் வழக்கின் சொத்தினை பொறுத்து ஏற்படுத்தப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் குறித்து 01.04.2025–ம் தேதியன்று வாதிக்கு தெரிய வந்த நிலையில், இந்த வழக்கானது காலவரையறை சட்டத்திற்கு உட்பட்டு உரிய வழக்கு மூலத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என வாதிடப்பட்டது.

5.2. இந்நிலையில், இதன் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையை கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும் பொழுது, அந்த வழக்குரையின் 4–வது பத்தியில் வழக்குச் சொத்தானது வாதியின் வருவாய் மூலம் வாதி மற்றும் பிரதிவாதியின் தகப்பனாரான காளிமுத்து பெயரில் 28.11.1996–ம் தேதியன்று பெயரிரவலாக கிரையம் பெறப்பட்டது என்று சங்கதிகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதேவேளையில், இந்த அசல் வழக்கின் வழக்குரையில் 4 மற்றும் 5–வது பத்தியில், வழக்கு சொத்தானது வாதி மற்றும் வாதியின் தகப்பனாருக்கு பொதுக் குடும்ப சொத்தாக பாத்தியப்பட்ட நிலையில், வாதிக்கு வழக்கு சொத்தில் உரிமையுள்ளது என வழக்குரைச் சங்திகள் இடம் பெற்றுள்ளன. இந்நிலையில், இதன் அசல் வழக்கின் வழக்குரையினை முழுமையாக பரிசீலனை செய்யும் பொழுது இதன் அசல் வழக்கின் சொத்தானது வாதியின் தகப்பனார் பெயரில் கிரையம் பெறப்பட்ட பொது குடும்ப சொத்து என்று சங்கதிகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கு சொத்தானது பொது



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.09.15 16:06:06 +0530

குடும்ப சொத்து என்ற நிலையில் அந்த சொத்தினை பொறுத்து ஏற்படுத்தப்பட்டுள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று இந்த அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதை காண முடிகிறது. ஆகவே, இதன் வழக்கில் இடம் பெற்றுள்ள சங்கதிகள் குறித்து விசாரணை செய்யாமல் இதன் அசல் வழக்கானது பெயரிரவல் சொத்து மாற்று தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைக்கு தடையாக அமைந்துள்ளது என்று இந்நீதிமன்றத்தால் இம்மனுவில் தீர்மானிக்க இயலாது. மேலும், இந்த மனுவில் எடுத்துரைக்கப்பட்டுள்ள காலவரையறை குறித்த பிரச்சனையானது சங்கதிகள் மற்றும் சாட்சியங்கள் அடிப்படையில் தீர்மானிக்க வேண்டியதாக அமைந்துள்ளதால், இந்த அசல் வழக்கானது காலவரையறைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்று இந்த மனுவில் தீர்மானிக்க இயலாது. ஆகவே, இந்த மனுவில் இடம் பெற்றுள்ள சங்கதிகளின் அடிப்படையில் இதன் அசல் வழக்குரையை சாட்சிய, சான்றாவணங்கள் விசாரணையின்றி நிராகரிக்க இயலாது என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது. அதனடிப்படையில், இந்த மனுவானது செலவு தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சசருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 15.09.2026–ம் தேதி கையெழுத்து செய்யப்பட்டது.

PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.09.15 16:06:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.

<u>**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி & சான்றாவணம் :–**</u> **இல்லை**

PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2026.09.15 16:06:16 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.